[…] Branch Library

# ஐந்து தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்கள் எம்.ஜி.ஆரை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினர்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ள புதிய யோசனைகள் குறித்து ஐந்து தமிழீழ விடுதலை போராளிகளின் தலைவர்களும் நேற்று முன்தினம் இரவு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனை சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பு முதல்வரின் இல்லத்தில் சுமார் அரைமணி நேரம் நடைபெற்றது. தமிழக மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனும் இதில் கலந்து கொண்டார். இப்பேச்சுக்கள் தொடர்ந்தும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வருடன் இது சம்பந்தமாக நடைபெறும் பேச்சுக்கள் முடிவுறும்வரையும் புதிய யோசனைகள் பற்றி எதுவித கருத்துக்களையும் தாம் வெளியிட முடியாதுள்ளது என ஈரோஸ் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். இந்த யோசனைகளின் சில அம்சங்கள் பற்றி அறிந்துகொள்ள புதுடில்லிக்கு செல்வது பற்றியும் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் கூறினர்.

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 06-7-86 ஞாயிறு (ஆனி 22 ஷவ் 2) முழக்கம் 151

★ கடலில் கொல்லப்பட்ட தமிழக மீனவர்கள் எனச் சந்தேகம்

# 6 ஆண்களின் அழுகிய சடலம் வேலணை கரையில் ஒதுங்கின

## உடலில் சூட்டுக் காயங்களும் பலத்த வெட்டுக் காயங்களும்

(வேலணை நிருபர் கே. வி. கே. ஜெயச்சந்திரன்)

வேலணை துறையூர் கடற்கரையில் நான்கு சடலங்களும், வெள்ளைக் கடற்கரையில் இரண்டு சடலங்களுமாக மொத்தம் ஆறு ஆண்களின் சடலங்கள் அழுகி, அடையாளம் காணமுடியாதவாறு மிகவும் உருக்குலைந்த நிலையில் நேற்று அதிகாலை ஒதுங்கின. இச் சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும், பயங்கரமான வெட்டுக் காயங்களும் காணப்பட்டன.

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தமிழக மீனவர்களின் சடலங்களாக இவையிருக்கலாமென்று தெரியவந்துள்ளது.

மரணமானவர்கள் அனைவரும் முப்பது வயதுக்குட்பட்டவர்களாவர். ஒரு சடலம் கறுப்பு உள்ளங்கியுடனும் மற்றும் ஐவரும் பச்சைநிற உள்ளங்கியுடனும் காணப்பட்டனர்,

இவர்களது கழுத்தில் அன்னை வேளாங்கண்ணி மாதாவின் சொரூபம் பொறிக்கப்பட்ட தாயத்துகள் காணப்பட்டன. கையில் வெள்ளிக் காப்புகளும் அணிந்திருந்தனர்.

ஆறு சடலங்களும் இளைஞர்களால் மீட்கப்பட்டு, உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டன. இவர்கள் பயணம் செய்ததாகக் கூறப்படும் படகுகளும் புங்குடுதீவு, வேலணைக் கரைகளில் ஒதுங்கியுள்ளன.

## பாஸ்இல்லாது சென்றபஸ்கள் ஆனையிறவில் திருப்பப்பட்டன

(வண்ணார்பண்ணை)

யாழ். நகரிலிருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டுச் சென்ற சில தனியார் பஸ்கள் ஆனையிறவு தடை முகாமில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன. பலாலி இராணுவ அதிகாரியிடம் 'பாஸ்' பெறாததன் காரணத்தாலேயே இவை திருப்பி அனுப்பப்பட்டனவாம்.

இது இவ்வாறு இருக்க, நேற்று அங்காடி பெற்றோல் வியாபாரிகள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கூடுதலான விலையில் பெற்றோல் விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்துள்ளனர். இதனால் மாலை பெற்றோல் விற்பனை நடைபெறவில்லை. பதுக்கிய பெற்றோல் இன்று கூடிய விலையில் விற்பனை செய்யப்படலாம் என சொல்லப்படுகிறது.

## விஜய குமாரணதுங்க நாளை தமிழகம் செல்கின்றார்!

இலங்கை இனப் பிரச்சினை மற்றும் ஜனாதிபதியின் புதிய யோசனைகள் குறித்து தமிழகத்திலுள்ள தமிழீழ போராளிகள் தலைவர்களுடன் மீண்டும் பேச்சு நடாத்த ஸ்ரீலங்கா மக்கள் கட்சி பொதுச்செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க நாளை திங்கட்கிழமை சென்னைக்கு செல்லவுள்ளார்.

திரு. விஜயகுமாரணதுங்க ஜனாதிபதியுடன் தனிமையில் பேசிய விபரங்களைத் தமிழீழப் போராளிகள் தலைவர்களுடன் எடுத்துக் கூறுவதுடன், புதுடில்லி சென்று பாரத கொள்கைக்குழுத் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியுடனும் பேச விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக மீனவர் கணபதி தகவல்

## அனுமதி பெற்று வந்தும் கடற்படையினர் சுட்டனர்

நடுக்கடலில் இலங்கை கடற்படையினரின் சூட்டுக்கிலக்காகிய 'ஸ்ரீ இராமஜெயம்' நிறுவன இரு படகுகளும் காணாமல்போன 'ஆஞ்சனேயர்' என்னும் படகினைத் தேடுவதற்காக இலங்கை, இந்திய கடற்படையினரிடம் முன்கூட்டியே அனுமதியினைப் பெற்றிருந்தன. இந்தத்தகவலை தற்சமயம் யாழ். பெரியாஸ்பத்திரியில் சூட்டுக்காயங்களுக்காக சிகிச்சை பெற்றுவரும் 'ஆஞ்சனேயர்' படகின் உரிமையாளர் வி. கணபதி தெரிவித்தார்.

'ஆஞ்சனேயர்' படகினைத் தேடுவதற்காக இந்திய கடற்படை அதிகாரிகள் தந்த அனுமதிக் கடிதத்தினை கடலில் நிலைகொண்டிருந்த இலங்கைக் கடற்படையினரிடம் காட்டி அதற்கான அனுமதியினை நாம் கோரியிருந்தோம். அப்போது மாலை 5.30 மணிவரை கடலில் காணாமல் போன படகை தேடுவதற்குரிய அனுமதி எமக்கு

…6ஆம் பக்கம் பார்க்க

## இருவருக்கு மரண தண்டனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பஸ் டிப்போ சந்தியில் வைத்து நேற்று இருவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. பாலசுப்பிரமணி

—6ம் பக்கம் பார்க்க

இன்று முதல் புதிய திட்டம்

## யாழ். கொழும்பு லொறிகள் வவுனியாவில் சோதனை

வடபகுதியில் இருந்து கொழும்புக்கு செல்லும் லொறிகள் இனிமேல் வழியில் பல்வேறு இடங்களிலும் வைத்து பொருட்களை ஏற்றி இறக்கி சோதனையிடப்படமாட்டாது என அறிவிக்கப்படுகிறது.

இதன்படி வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக மட்டுமே இந்த லொறிகள் நிறுத்தப்பட்டு அவற்றின் பொருட்கள் இறக்கி சோதனையிடப்படவுள்ளன. இங்கு சோதனை முடிவுற்றதும் அந்த லொறிகளுக்கு பாதுகாப்பு அதிகாரிகளினால் ஒரு காட் வழங்கப்படும். அந்த காட்டை

…6ம் பக்கம் பார்க்க

## திருமலை தமிழர் 130 பேர் பூஸாவிலிருந்து விடுதலை

(திருகோணமலை)

கடந்த மாதம் 24ம் திகதி திருகோணமலைப் பகுதியில் இருந்து கைது செய்யப்பட்டு பூஸாவுக்கு கொண்டு செல்லப்பட்ட நானூற்று தொண்ணூற்று நான்கு பேரில் நூற்று முப்பது பேர் விசாரணைகளின் பின்னர் இன்று விடுதலை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இன்று திருகோணமலையில் இருந்து மூன்று பஸ்கள் அவர்களை அழைத்து வருவதற்காக அனுப்பப்படுகின்றன முன்னாள் மூதூர் உதவி அரசாங்க அதிபர் திரு. கணேசலிங்கம் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு இந்த பஸ்களில் பூஸாவுக்கு சென்று அவர்களை திருமலைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுதலையாவோரில் மாணவர்களும், அரச ஊழியருமே அதிகமானோர் என தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை கடற்படையின் சித்திரவதைக்குள்ளான தமிழக மீனவர் ஐவர் புங்குடுதீவு அடைந்தனர்

இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்றசமயம் காணாமல் போன 'ஆஞ்சனேயர்', என்னும் படகு ஐந்து மீனவர்களுடன் நேற்று முன்தினமிரவு புங்குடுதீவு கரையை வந்தடைந்தது. இப்படகு இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு சில மைல்கள் தூரம் சென்றதும், பல தடவைகள் இலங்கை கடற்படையினரின் துன்புறுத்துதலுக்கும், தாக்குதலுக்குமுள்ளாகி திசைமாறி பல நாட்கள் கடலில் தடுமாறிய பின்னர் புங்குடுதீவை வந்தடைந்திருந்தது. இதுபற்றி இப்படகில் பயணம் செய்த இராமேஸ்வரம் மீனவர் திரு. நாகமுத்து (24) தனது பயங்கர அனுபவத்தை பின்வருமாறு 'ஈழமுரசுக்கு' நேற்று மாலை விபரித்தார்.

''நானும் மற்றும் இராமேஸ்வரம் – கரையூரைச் சேர்ந்த அந்தோனி (45), மௌவுருதீன் (30), ஆறுமுகம் (45), பெரியவர் (50) ஆகிய மீனவர்களும் மீன் பிடிப்பதற்காக கடந்த 26-ம் திகதி

—6-ம் பக்கம் பார்க்க

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இருபாலை கிழக்கு செட்டிய குறிச்சியில் மா, பனை, தென்னை பிரயோசனங்களுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. வி ரம்: சண்முகம் அன் சன்ஸ் 432 (222), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

R/24008

### தேவை

உங்கள் இசைக் கருவிகளை (பியானோ வீணை, கிட்டார், வயலின் முதலியன) நல்ல விலைக்கு விற்பதற்கான ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும். உங்கள் இசைக் கருவியின் விபரங்கள், விற்க வேண்டிய விலை உட்பட கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு கடித மூலம் தொடர்பு கொள்ளவும். நவீனஸ் 390, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

R/23150

## சென். திரேசா மகளிர் கல்லூரி திறனுற்றல்

(நீர்வேலி)

அச்சுவேலி, சென். திரேசா மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளிற்கு இடையிலான பண்ணிசைப் போட்டியில் நீர்வேலி, சீ. சீ. தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த செல்வி கா. குமுதினி கீழ்ப்பிரிவு தனிப்பாடல்போட்டியில் முதலாமிடத்தையும், மத்திய பிரிவுத் தனிப்பாடல் போட்டியில் செல்வன் சு. சுரேன் முதலாமிடத்தையும் பெற்றனர். கீழ்ப்பிரிவு பெண்கள் குழுப் பாடல் போட்டியிலும் இப்பாடசாலை முதலாமிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்தி சபை உதயம்

(வேலணை)

வேலணை கிழக்கு அம்மன் கோவிலடி மகாவித்தியாலயத்திற்குப் புதிய அபிவிருத்திச் சபை ஒன்று வித்தியாலய அதிபர் திரு. சோ வடிவேல் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. சோ. வடிவேல்(அதிபர்), செயலாளர் திரு. ஆ. கருணாகரன், பொருளாளர்: திரு. பி. சிவசுந்தரம்(ஆசிரியர்)மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## கும்பாபிஷேகம்

(சரசாலை)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ இலந்தியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 14ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. மேற்படி ஒழுங்குகளை ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## ★ பிறந்த நாள் வாழ்த்து ★

கந்தர்மடம் குணரத்தினம் சத்தியரூபவதி தம்பதியின் மகள் கீதா இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

வதிரி தெய்வேந்திரன் ஜெகதாம்பிகை தம்பதியின் மகன் பிரதாப் இன்று தனது நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

யாழ். காதிஅபூபக்கர் வீதி, மாணிக்கம் ஸ்ரீரஞ்சிதமலர் தம்பதியின் மகன் சகிலேந்திரா இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

## வாடிக்கையாளர்கள் பாவனையாளருக்கு

### தோலகட்டி தயாரிப்பாளர்களின் ஒரு முக்கிய அறிவித்தல்

தற்போது உள்ள கால சூழ்நிலையிலும் மூலப் பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் எமது நெல்லிரசத்தின் விலையை - அதாவது மொத்தவிலையை உயர்த்தி உள்ளோம். வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் இவ்விலை உயர்வை தற்கால சூழ்நிலையில் பெரிதாக எண்ணமாட்டார்கள் எனவும் எமக்கு நல்லாதரவு தருவார்கள் எனவும் தாழ்மையுடன் எண்ணுகின்றோம். நன்றி

போலிகள் கவனம்!

நெல்லிரசம் மொத்தவிலை ரூபா 22/-
ஆகக் கூடிய சில்லறை விலை ரூபா 24/50

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதை மறவாதீர்கள்.

ஏகப்பிரதிநிதிகள்
ஜோ. எகட்டன்,
செனித் மார்கட்டிங்,
யாழ்நகர்.

செபமாலை தாசர் சபை,
தோலகட்டி,
வயாவிளான்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
வரணி மிசன் விற்பனை நிலையம்
145, நவீனசந்தை யாழ்ப்பாணம்

B/1393

## முன்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மன்னார் மாவட்ட நீதிமன்றில்

மன்னார், சின்னக்கடை, காலஞ்சென்ற திருமதி அம்பிகா இராஜேந்திரனின் மரணசாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்க வழக்கு | இல. T/1.

மன்னார், சின்னக்கடை குமாரசாமி பிரான்சீஸ் இராஜேந்திரன்,

மனுதார்.

1. மனோகாந் இராஜேந்திரனும்,
2. தாரணி டொறத்தி இராஜேந்திரனும். (பராய மடையாதவர்கள்) இருவரும் சின்னக்கடை, மன்னார்.
3. திருமதி சிசீலியா டெய்ஸி குமாரசாமி சின்னக்கடை, மன்னார். (1-ம், 2-ம் பராய மடையாத எதிர் மனுதாரர்கள் தங்கள் பாதுகாவலரான 3-ம் எதிர் மனுதாரர்மூலம் தெரிபடுகின்றனர்.

எதிர் மனுதாரர்கள்.

மேலே உள்ள பெயர் கொண்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிருவகிப்பதற்காக இவ்விலக்கம் கொண்ட வழக்கு இந் நீதிமன்றில் தொடுக்கப்பட்டு, முன்னுறுதிக் கட்டளை பதிப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள எவரேனும் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றில் தோன்றி, குறித்த முன்னுறுதிக் கட்டளை ஏன் பூரணப்படுத்தப்படக் கூடாது என்பதற்குக் காரணம் ஏதுமிருப்பின் அவற்றை இம்மன்றில் தெரியப்படுத்துமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றின் கட்டளைப்படி

மு. பத்மநாதன்,
பதிவாளர்.

1986-ம் ஆண்டு ஜூன்மாதம் 30-ந் திகதி என்னால் வரையப்பட்டது.

ஏ. எஸ். ஜோண்தாசன்,
மனுதாரரின் சட்டத்தரணி.

R/24006

## பிரயாண ஒழுங்குகள்

## BAHRAIN VACANCIES

Waitresses/Female: Hotel Experiance and very good knowledge in English.
சம்பளம் 150 US டொலர்

COOK: ஐரோப்பிய இந்திய உணவு தயாரிப்பு அனுபவம்.
சம்பளம்; 180 US டொலர்

Security Guard: 45வயதுக்கு குறைந்தவரும் பொலிஸ் சேவை செய்தவரும் ஆங்கில அறிவு அவசியம்.
சம்பளம்: 160 US டொலர்

எல்லாவற்றிற்கும் இலவச இருப்பிடம் உணவு

3 புகைப்படம் சான்றிதழ் உடன் நேரடியாக வரவும். 2 கிழமைக்குள் பிரயாணம்.

துசிற்ரா
சாந்தி தியேட்டர் முன்பாக
90, கந்தப்பசேகரம் ரோட்,
யாழ்ப்பாணம்.

R/24009

## யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளைக்குழுத் தேர்தல்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(பதிவு இல. யா. 1565 திகதி 30-03-71)

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:- 12-07-86 சனிக்கிழமை. தேர்தல் திகதி:- 20-07-86 ஞாயிற்றுக்கிழமை.

தேர்தல் நடவடிக்கை சம்பந்தமான விதிகளை உள்ளடக்கிய பிரசுரம் எமது சங்க எல்லாக் கிளைகளிலும் 01-07-86 முதல் அங்கத்தவர்கள் தகவலுக்காக பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

B/1403 காரியதரிசி.

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ சவூதிஅரேபியா

(அ) கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எமது முகவர் உங்களை கனடா வரை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் யூலை 15ம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

(ஆ) டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

(இ) சவூதிஅரேபியாவுக்கு (Labourers) தொழிலாளர்கள் உடன் தேவை. இவர்களுக்கு யூலை 15ம் திகதிக்குப் பிந்தாமல் நேர்முகப்பரீட்சை நடைபெறும். இந்த நேர்முகப் பரீட்சையில் பங்குபற்ற விரும்புவோர் 15ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போர்ட்டும் 6 படமும் கொண்டு வந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து முன்னுரிமை பெற்றுக்கொள்ளவும்

(ஈ) கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான பிரயாண சேவை (Colombo) கொழும்பில் இருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். யாவற்றுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குறிப்பு:
பஸ் வழி இல. 764,
(பலாலி வீதி,
கோண்டாவில் சந்திக்கு அருகாமை)

R/23156

## Computer Programming & Data Programming Course

**Basic Language**
**6 Months**

Weekend classes by qualified and experianced panel of lecturers.

Commencement: 27th July, 1986, 10 மணி

Fees: 1500/- (தவணைமுறையிலும் செலுத்தலாம்)

60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals
Ideal for those who seek employment abroad
வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

I.C.M.A., A.A.T., I.D.P.M. I.A.B., Radio & TV., Engineering, TOFFL வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

"We never forget you have a choice"

## CANTABIA INSTITUTE

(Pioneers in Computer Education)
21, MAIN STREET,
JAFFNA.
Phone: 24201

B/1404

# தமிழர் பிரச்சினையைத் தீர்க்க 9 மாகாணசபைகள் எதற்காக?

இலங்கையில் தமிழரின் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாக, இலங்கை அரசு மிக அண்மையில் முன் வைத்த பிரரணைகளை, முழுமனதாரத் தமது கருத்திற் கொள்ள வைத்தலில், தமிழர்களிடம் காணப்படும் மட்டுப்பாடுகளும் தயக்கமும் பற்றிய ஒரு குறிப்புரை.

இலங்கைத் தமிழர் நெருக்கடியின் சிறப்புப் பண்பு என எதனையும் குறிப்பிடலாமாயின், ஒரு மெய்ம்மையை அவ்வாறு பெயரிட்டு வழங்கலாம். சம்பவங்கள் ஒன்றையடுத்து இன்னொன்று தொடர்வதும், நேற்று எழுதப்பட்டது இன்று கிடடத்தட்டக் காலம் கடந்தனவாகி விடுவதுமே அம் மெய்ம்மையாகும். இரண்டே நாட்களுக்கு முன்னர் அவசர கலந்துரையாடலுக்கு ஏற்றனவாக இருந்தவை யாவை? வானத்தினின்று இலங்கை அரச படைகளினால் பொழியப்பட்ட வெடி குண்டுகளுக்கும், கடற்படையின் பீரங்கித் தாக்குதல்களுக்கும் பாத்திரமாகிய குடிமக்கட் பிரதேசங்களில் இடம்பெற்ற இலக்குகளைப்பற்றிக் கலந்துரையாடுவது அவசரம் எனப்பட்டது. அது இரு தினங்களுக்கு முன்பு. இன்று, ('பீஸ் பக்கேஜ்') சமாதான ஆலோசனைகளின் தொகுப்பு. அத்தகைய அவசர கலந்தாலோசனைக்கு அருகதையாகியிருக்கிறது.

இலங்கைப் பத்திரிகைகள், விசேடமாக ஆங்கிலத் தினசரிகள், சில கிறீஸ்தவ மதப் பிரசார ஆர்வத்துடன், 'இதோ, சமாதானம் வந்துவிட்டது. நீங்கள் அதற்குத் தயாரா?' என்கின்றன.

இதுகாலவரை கிடைத்த பிரேரணைகளின் தொகுப்புகளில இதுவே சிறந்தது; மிக முக்கியமானதுங்கூட. அதை யிட்டு ஐயமில்லை. ஆட்சி அதிகாரம் உரித்தாக்கப்படவுள்ள கூறு, மாகாணமே. முன் போல, ஒரு மாவட்டம் அல்ல; எனவே, "இதுதான் சிறந்தது; கருத்திற் கொள்ளப்பெறத் தகுந்தது" என இந்தியஅரசின் சிபார்சு இலச்சினை அதன்மீது பொறிக்கப்பட்டுள்ளது; ஆகவே, இத்தொகுப்பு முக்கியமானதுங்கூட.

இதற்குப் பெரும் அர்த்தமுண்டு. ஏனெனில், இம்முறை பேரம்பேசியவர் ஒரு தமிழர் என்பதோடு, இந்திய அரசியற் கட்சியாகிய இந்திரா காங்கிரஸின் ஓர் உள்ளாளுமாக இருப்பதோடு, மேலும் முக்கியத்துவம் வகிக்கும் வகையில், இந்தியப் பிரதமரின் நெருங்கிய நம்பிக்கைக்குப் பாத்திரமானவருங்கூட. இப் பிரேரணைகளின் தொகுப்பு கனம்பண்ணி, முழுமனமார நோக்கப்பட வேண்டிய ஒன்று; அதனை இலங்கைத் தமிழர் அறிவர்.

ஆனால், இங்கு குறித்த சில காரணிகளை ஒருவர் மறந்துவிடலாகாது. அவை ஏனைய எல்லாவற்றையும் மிஞ்சுவன. இலங்கை அரசு இப் பிரேரணைகளின் தொகுப்பினைத் தமிழர் முன் வைத்துள்ளது. அல்லாமலும், இக் காரணிகள்தாம் இந்தத் தொகுப்பை உள்ளபடியாக இதயபூர்வமானவையாகக் கணித்துக்கொள்ளவிடாது தமிழரைத் தடுத்தும் நிற்கின்றன. காரணம்? கடந்த சில வாரங்கள், மாதமாக தமிழருக்குச் சில அனுபவங்கள் கிடைத்திருந்தன. அவ்வனுபவங்கள் தொடரும் எனவும் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. சமாதான பிரேரணையுடன் கூட்டாக, யுத்த இடைநிறுத்தம் போலும், தோதான, இராணுவ நியதிகளுக்குரிய ஒரு செயலாவது சேர்ந்திருத்தல் வேண்டும். அப்படியான செயல் அற்ற எதுவித சமாதான பிரேரணையையும் இவ்வனுபவங்கள் சந்தேகத்திற்கு இடமானவை ஆக்கும்.

இவ்வனுபவங்களிற் சில வற்றை இங்கு குறிப்பிடுவது அவசியம்:

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் வடகடலோரமாக அமைந்த வல்வெட்டித்துறை மீது வானத்திலிருந்து வெடிகுண்டுகள் பொழியப்பட்டன. மறக்கவொண்ணு மிருகத்தனமான இக்குண்டுவீச்சு தொடர்ந்து இரண்டு நாட்களாக நிகழ்த்தப்பட்டது- இரு தினங்களும் அதிகாலையிலேயே தொடங்கிய இத்தாக்குதல் நண்பகல் கழிந்தபின்னரும்தொடர்ந்தது. இரண்டாம் நாளன்று தரை, கடல், வானம் ஆகிய மும்முனைகளிலிருந்தும், பன்னிரண்டரை மணித்தியாலங்களாக வெடிகுண்டுகள்பொழிந்தவண்ணமாக இருந்தன.

தற்காப்பு அகழிகளே மக்களைப் பாதுகாக்கத் துணைநின்றன. இவை மட்டும் இல்லாது இருந்திருக்குமானல் பாரதூரமான உயிர்ச்சேதம் விளைந்திருக்கும். இரண்டாம் உலகப் போர் காலத்தில் யப்பானிய விமானங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வந்து குண்டு பொழியலாம் என்ற பீதி நிலவியது. அந்நாட்களில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயரிடமிருந்தே யாழ். தமிழ் மக்கள் இப்பேர்ப்பட்ட அகழிகளுள் இறங்கித் தமது உடலையும் உயிரையும் தற்காத்துத் தப்பித்துக்கொள்ளப் பயின்றிருந்தனர். எவ்வாருயினும், சொத்துக்கள் கனத்த சேதம் அடைந்தன.

இவற்றைவிட, யாழ்ப்பாணக் குடாநாட்டின் தெற்குக் கடலோரமாக அமைந்த குருநகர்க் கடல்மீது திடகாத்திரமான முப்பத்துநாலு கத்தோலிக்க மீனவர்கள் இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படை

## சிறப்பு நிருபர்

யினரினால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். பதினைந்து முதல் அறுபத்தைந்து வரை பல வயதினரான இவர்களது சடலங்கள்கடலிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட தருணம், இறந்தோரின் கைகள் தலைக்கு மேல் நீண்டபடி இருக்கக் காணப்பட்டன.

பொதுவாக இவற்றுடன், அரசாங்கத்தின் திட்டமிட்டு யாழ்ப்பாணத் தமிழ்க் குடிசனங்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாரிய வானத் தாக்குதலுக்குப் பலியாகிஞேரின் நிரல் முடிவடைந்து விடவில்லை. நாளுக்கு நாள், இருந்தாற்போலிருந்து, 'ஹெலிக்கொப்டர் கண்ஷிப்ஸ்' தமது பீரங்கிகளாற் குடிசனங்களைச் சுட்டுத் தள்ளி விடுவது சர்வ சாதாரணம். இவற்றிற்குப் பலியானோர், படுகாயமுற்றோரின் தொகை வேறு.

இலங்கை அரசாங்கம் இப் பிரேரணைகளின் தொகுப்பினை வெளிவிடுவதற்கு இரண்டே இரண்டு நாட்களுக்கு முன்னதாக, இலங்கைத்தீவின் கிழக்குக் கடலோரமாக உள்ள சிறந்த இயற்கைத் துறைமுகமாகிய திருகோணமலையைச் சூழவுள்ள பிரதேசங்களை ஆங்காங்கே முற்றுகையிட்ட இராணுவம், ஆயிரத்து ஐந்நூறு இளம் தமிழர்களைக் கைதாக்கிக் கொண்டு போயிற்று. இலங்கையின் தென்பாகத் துறைமுகமாம் காலிக்கு அணித்தாகவுள்ள பூஸா எனும் இடத்தில்இராணுவப் பாசறையொன்று உண்டு. கைது செய்யப்பட்டவர்களில் சுமார் ஆயிரத்து இருநூறு தமிழ் இளைஞர்கள் பாசறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

மட்டக்களப்புத் துறைமுகப் பட்டினம் இலங்கைத் தீவின் கிழக்குக் கடலோரமாக இடம் பெறுகிறது. தமிழர் அதிகமாக வாழ்ந்துவரும் அங்கும் அவர்களது நிலைமை முற்கூறப்பட்டவற்றைவிட மிக வேறல்ல.

சிங்களவர்-தமிழரின் ஏட்டிக்குப் போட்டியான இந்த யுத்தம் தற்போது முன்னரைவிட உக்கிர இரத்தக் களரியாக மாறிவருகின்றமை உண்மையே. சிங்கள இராணுவத்தினர் தமிழ்க் குடிசனங்களைத் தாக்கித் துன்புறுத்த தமிழர் விடுதலைப் போராளிகளானோர் தெரிவு செய்யப்பட்ட குறித்த சில சிங்களப் பிரதேசங்களை இலக்காகக் கொண்டு தாக்கிப் பதிலடி கொடுப்பர்.

இங்ஙனமாக மூண்டுள்ள போர்த் தீச்சுவாலை, இராணுவத் தயவுதாட்சணியமற்ற கதியில் கனன்று செல்ல, உள்ளபடியாக இதயங்களின் ஆழத்தினின்றும் எழும் வினு: 'இப் பிரேரணைகள் உண்மையானவையாக, இதய சுத்தியானவையாக இருக்க முடியுமா? என உருப்பெறுகிறது.

தமிழர் சர்ச்சையை தனிப்பட்ட ஒரு பிரச்சினையாகக் கொள்ள, இலங்கை அரசாங்கம் இன்னமும் விரும்பவில்லை. மிக முக்கியமான ஒரு அவதானிப்புரை இது. இதைவிடுத்து, அவ்வரசாங்கம் அவ்வாறு

# இப் பிரே)ணைகள் உண்மையானவையாக இதய சுத்தியானவையாக இருக்கமுடியுமா?

கொள்ள விரும்புகிறது என வைத்துக்கொள்வோம். அவ்வாறு அது விரும்புகிறதாயின், வட மாகாணம், கிழக்குமாகாணம் புறநீங்கலான ஏனைய ஏழு மாகாணங்களிலும் அந்த அரசாங்கம் ஒரு மாகாண நிருவாகத்தை ஏன் 'விதிக்க' வேண்டும்?

இலங்கை ஜனுதிபதி அண்மையில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டினூர் "மாகாண நிருவாக முறைமையினின்றும் குறித்த சில மாகாணங்கள் சுயவிருப்பின் பேரில் விலகிக்கொள்ளக்கூடுமா?" என்று ஜனுதிபதியிடம் ஒருவினு எழுப்பப்பட்டது. அது மிகச் சரியே. தமிழர்களுக்கு விசேடமாக ஏதொன்றுவது கொடுபடல் ஆகாது: நிதர்சனமாக, இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்கும். சிங்களவர்க்கு அவை தேவையோ இல்லையோ, தமிழர்களுக்குக் கிடைத்துள்ள அத்தனையும் எல்லாச் சிங்கள மக்களுக்கும் கிடைக்கப்பெறச் செய்வது அவசியம். ஆனல் இச் சம பங்கீட்டில் தமிழ் மக்களுக்குச் சமத்துவ பங்கு வழங்கப்படவில்லை.

ஓர் ஐக்கிய இலங்கை அத்தியாவசியமானது. இதனைத் தமிழ் மக்கள் மனதிற் பதியவைத்தல் அவசியம். ஆனல் இங்ஙனம் பதியவைத்தல் நிகழவில்லை. மேலும், இப்பேர்ப்பட்ட பதியச்செய்தலின் மாட்டு பூரண பாராமுகமும் பாராட்டப்படுவதும் தெரிகிறது. இலங்கை அரசாங்கத்தின் பெரும் ஆர்வம், வேணவா, இலங்கைத் தீவில் பிரிவினை இருத்தலாகாது என்பதோடு மாத்திரம் நின்றுவிடுகிறது. ஆனல், ஓர் ஐக்கிய இலங்கை, இலங்கைத் தமிழர்களுடைய வேணவாக்களை எப்படி நிறைவேறச் செய்யும்? இவ்விடயத்தை இலங்கை அரசாங்கம் வார்த்தைகளால் தீண்டுவதுமில்லை (சிந்தனையால் தானும் தீண்டுவது கிடையாது) அதாவது, அதையிட்டுச் சிந்தித்துப் பார்ப்பது கூட இல்லை. சிங்கள பௌத்த இலங்கை பிரிக்கப்பட ஒண்ணுதது இந்நாடு அவர்களுக்கே சொந்தமானது. ஏனையோர் இத்தீவின்கண் இருப்பது 'சகித்துக்கொள்ளப்படுகிறது' இவ்வளவுதான் நிலைமை என்பது வலியுறுத்திக் கூறப்படுகிறது

கடந்த சில மாதங்களாக, இப் மனோதத்துவம், இந்த மன நிலைப்பாடு, தனக்கு எட்டாத அளவு எட்டிச் சென்றுள்ளது' கொழும்பு மாநகரில், அதாவது தலைநகரில் (தமிழர் விடுதலைப் போராளிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட) குண்டு வெடிப்புகள் அதிகரித்துச் செல்கின்றன. மத்திய தந்தி அலுவலகம், விமானத்தளம் போலும் நடுவங்களில் அவை சம்பவிக்கின்றன. அது கண்டு, முக்கியத்துவம் மிக்க வேலைத் தலங்கள், பணியகங்களில் தொழிலில் அமர்ந்திருக்கும் தமிழ்ப் பணியாளர்களை இலங்கை அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பிவிட்டது.

இலங்கை வானெலி ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையம் என்பவற்றில் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவுகளில்கடமையாற்றும் தமிழ்ப் பணியாளர்கள் கடமை நிறைவேற்ற இயலாதபடி, அலுவலகம் புக விடாது, நிறுத்தப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளான தமிழர்கள் பணியாற்ற அனுமதிக்கப்படுவது இல்லை.

தமிழர்கள் எல்லோரையுமே நாம் சந்தேகிக்கிறேம். ஆக, இதுதான் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு. அரசாங்க உத்தியோகபூர்வமாக வாய்ந்த தமது கடமைகளை நிறைவேற்றுதலினின்றும், இவ்வாறு சில தமிழ் அரசாங்க ஊழியர்கள் அதே அரசாங்கத்தினலேயே தடுக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் இச்செயல் நியாயமான ஆத்திரமூட்டுவதாகும். எவ்வளவு அற்ப விஷயமாயினும் தொட்டதற்கெல்லாம் தமிழர்க்கு எதிராக மார்தட்டி யுத்த சந்நத்தராகும் சிங்கள மகா சபாகூட, அரசாங்கத்திடம் கேள்வியொன்றைக் கேட்டுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில், ரூபவாஹினியில் தமிழர்களை வைத்திருக்க உங்களால் முடியாது. அப்படியானல் ஏன் உங்களுடைய அமைச்சரவையில் இப்படித் தமிழர்களை வைத்திருக்கிறீர்கள்? இது சிங்கள மகா சபை அரசாங்கத்தை நோக்கி எழுப்பிய வினு.

இவையெல்லாம் வேதனை தரும் அனுபவங்கள். இலங்கையின் ஆட்சி முறைமையினுள் தன்னைத் தேவைப்படுத்துவதாகத் தமிழர் எவராவது இப்பொழுது உணர்வதில்லை. அப்படியாயின் அரசாங்கத்தின் இப் பிரேரணைகள் இதய சுத்தியானவை, அகத் தூய்மை வாய்ந்தவை என அத்தகைய ஒரு தமிழர் எப்படி அவற்றை ஏற்றுக் கொள்ள இயலும்?

இலங்கையின் ஆட்சி முறைமை தமிழ் மகனிடம் உறுதியான நம்பிக்கை வைத்திருக்கவில்லை. அதே வகையில் தமிழர்களும் தம்மைப் பொறுத்தவரையில் இலங்கைத் தேச ஆட்சி முறைமையில் நம்பிக்கை கொண்டவர்களல்லர். தமிழர் முன் தோன்றியுள்ள பிரச்சினை வெறுமனே சுயாட்சியின் சுயாதிக்கத்தின் அளவு பற்றியது மட்டுமல்ல. அத்துடன் மேலதிகமாக யார் இப் பிரேரணைகளை அமுலாக்கப் போகிறுர்கள்? எவ்வளவு இதய சுத்தியாக அமுலாக்கப் போகிறுர்கள்? இவையும்தான் தமிழர் முன்னிலையில் எழுந்துள்ள பிரச்சினைகளாகும்.

இங்குதான் தவறுன முகாமைக்கு ஆளாகிய ஒரு கல்வி முறைமையின் தகாத விளைவுகளை நாம் நேருக்கு நேர் எதிர் நோக்கி நிற்கிறேம். தாய்மொழி வழிப் போதனை என்பது அரிதெனப் போற்றற்குரிய ஒரு உயர் கருத்தேற்பு ஆகும். அதனை என்ன விதமாக எவ்வளவு தூரம் தவருகக் கைகொண்டுள்ளோம் என்பது இப்பொழுதுதான் தெரியும். பரம்பரை பரம்பரையாகச் சிங்கள மாணவர்களையும் தமிழ் மாணவர்களையும் நாம் உருவாக்கியுள்ளோம் உண்மை ஆனல் இவர்கள் ஒருவரையொருவர் முழு மனமார்ந்த ஏளனத்துடன் நோக்குகின்றனர். கணிக்கின்றனரே! இலங்கை மாதா, இருபேர்க்கும் பொதுவான, இருவரையும் தன் மடிமிசை ஈன்றெடுத்த, தாய் எனும் உணர்வுதான் அவர்களிடம் என்றுமே இல்லையே! இம்மாணவ, மாணவியர் பரம்பரைகளை இத்துணை தீவிர (சிங்களவர், தமிழர் எனும்) மனித இன உணர்வு ஆட்கொண்டிருக்கிறது. இது தான் இலங்கை நாட்டின் அடித்தள அமைவு.

இப் பேர்ப்பட்ட ஓர் அடித்தள அமைவின்மீது நியாயமான பாரபட்சமற்ற அமுலாக்கம் (செயற்படுத்தல்) நிறைவேறும் என நாம் எதிர் பார்ப்பது சாத்தியமாகாது.

தற்போதைய பிரேரணைகளின் தொகுப்பு ஏற்றுக் கொள்ளப்படத் தகுந்ததா? இது விடயத்தில் அக்கறையுடைய ஆள் எவராவது முதலிற் செய்ய வேண்டியது யாது? இப்பிரேரணைகள் எப்படிச் செயற்படும்? இதனை முதலில் விபரங்கள் சகிதம் அவர் தெளிவாக எடுத்தியம்புதல் வேண்டும். அவற்றைச் செயற்படுத்த, அமுலாக்கப்போவது யார்? யாருடைய உதவியோடு அவை அமுலாக்கப்படும்? யாருடைய மேற்பார்வையின்கீழ்? அமுலாக்கம் அல்லது செயற்பாடு நிறைவேறியதும், அது எங்ஙனம் மீளாய்வுக்கு உட்படும்? இவை முதலான உத்தாவாதம் இல்லையேல், பிரேரணை எதுவானுலும் அது ஒரு வெறும் காகிதமேயாகும்.

இந்த அளவு ஆழ்ந்த பெரும் சந்தேகம் இம்முழுச் சூழலையும் கவ்வியிருக்கிறது. இந்நிலையில் ஒரு சிறு குண்டுசித் துளைகூட அதல பாதாளமாகத் தெரியும். இப் பிரேரணைகளின்கண் அவசிய அம்சங்கள் சில கூறுது விடப்பட்டுள்ளன. அங்ஙனம் கூறப்படாதனவற்றைக் கருத்தாழமாகப் பகுப்பாய்வு செய்தற்கு உகந்த தருணம் இதுவல்ல. ஆயினும், பிரேரணைகளிடத்தே இடம்

...5ம் பக்கம் பார்க்க

# ஆத்திகத்தை கட்டியெழுப்ப பண்ணிசை உதவுகின்றது

"இன்று தீவுப்பகுதிகளில் நிலவும் மிகவும் கஷ்டமான சூழ்நிலையிலும் நயினாதீவு உப வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டியினை ஒழுங்கு படுத்திச் சிறப்புற நடத்திய அதிபர்களையும் ஆசிரியர்களையும் போற்றுவதோடு பங்கு கொண்ட மாணவர்களையும் பாராட்டுகிறேன். சைவத்தின் கண்ணாக விளங்குகின்ற தெய்வத் திருமுறைகளை ஒழுங்காக மனனஞ் செய்வதற்கு இத்தகைய போட்டிகள் உதவுவதோடு அவற்றைப் பொருளுணர்ந்து பாடுவதற்கும் வழி வகுக்கின்றன.''

இவ்வாறு புங்குடுதீவு வட்டாரக்கல்வி அதிகாரி க. இ. ஆறுமுகம் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தமது உரையில் 'திருமுறைகள் இறைபக்தியை ஏற்படுத்துவதற்கு வழி கோலுவதோடு மனிதனின் ஆன்மீகத்தை வளர்க்கவும் காலாகின்றன. ஆகையினால் இளமையிலிருந்தே இசையோடு கூடிய திருமுறைகளைப் பாடப் பழக வேண்டும். இத்தகைய பண்ணிசைப் போட்டிகள் மாணவரின் ஆளுமையின் ஒரு பிரிவாகிய ஆத்திகத்தைக் கட்டியெழுப்பக் கைகொடுப்பதோடு அவர்கள் திறமைகளையும் வெளிக்கொணர வாய்ப்பளிக்கின்றன' என்றார்.

போட்டிகளில் பின்வருவோர் வெற்றியீட்டினர்.

க. திருமகள் பாலர்பிரிவு (தனி) ஸ்ரீகணேசகனிட்ட மகா வித்தியாலயம். க சாருமதி கீழ்ப்பிரிவு (தனி) நாகபூஷணி வித்தியாலயம் மாணவிகள் கீழ்ப்பிரிவு (குழு) நாகபூஷணி வித்தியாலயம். மாணவர்கள் கீழ்ப்பிரிவு(குழு) ஸ்ரீகணேசா கனிஷ்டமகாவித்தியாலயம். தா. நாரணி மத்திய பிரிவு (தனி) ஸ்ரீநாகபூஷணிவித்தியாலயம். ம. மணிவிழி மேற்பிரிவு (தனி) மகா வித்தியாலயம். மாணவிகள் மேற்பிரிவு (குழு) மகாவித்தியாலயம். பொ. நேசமலர் அதி மேற்பிரிவு (தனி) மகாவித்தியாலயம்.

### வீட்டுக்கு வீடு தோட்டம் அமைப்பது

# இன்றைய நெருக்கடி நிலையில் மிகவும் அத்தியாவசியமாகிறது

(சுன்னாகம்)

"குடாநாட்டிற்கும் தீவின் ஏனைய பகுதிகளுக்குமான வாகனப் போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் சூழ்நிலை உருவாகி வருகின்றது இதன் காரணமாக நாம் பாரிய உணவுத் தட்டுப்பாட்டை எதிர் கொள்ளுதல் தவிர்க்கமுடியாததாகும். வாகனப் போக்குவரத்து முழுமையாகத் துண்டிக்கப்படின் நம் மக்களனைவரும் பட்டினிச் சாவிற்கு இலக்காக வேண்டியேற்படும். இந்த நெருக்கடியான சூழலிலிருந்து நாம் மீள வேண்டுமானால் வீடுகள்தோறும் வீட்டுத் தோட்டங்கள் அமையவேண்டும்."

இவ்வாறு ஊரெழு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வீட்டுத்தோட்டப் போட்டிக்கான இலவச விதை வழங்கு வைபவத்தில் உரையாற்றும்போது ஊரெழு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. சி. சக்திகிரீபன் குறிப்பிட்டார்.

சிறு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் திரு சி. கணேசு தலைமையில் நிகழ்ந்த இவ் வைபவத்தில் அவர் மேலும் கூறியதாவது, "வரப்போகும் நெருக்கடிச் சூழ்நிலையால் ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்குமுகமாக ஆரம்பிக்கப்படவிருக்கும் வீட்டுத்தோட்டங்களுக்கு சர்வோதயம் பல உதவிகளை வழங்கவுள்ளது. இவ்வுதவிகளை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் செய்கை பண்ணப்படும் பயிர்களை அழித்தொழிக்கும் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறோம். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு பொது நிறுவனங்களும் கைகொடுத்துதவ முன்வரவேண்டும்.''

## பண்டித பரீட்சைகளில் சித்திபெற்றோர் விபரம்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் கடந்தவருடம் நடத்திய பண்டித பரீட்சைகளில் சித்தியடைந்தோர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பிரவேச பண்டிதர் தேர்வில் வா. சடாட்சரம் இரண்டாம் பிரிவிலும், ஜெயந்தி சுப்பிரமணியம், ஸ்ரீ மாலா சின்னத்தம்பி, சூரியகுமாரி கதிரவேலு செ. சிவலிங்கராசா ஆகியோர் மூன்றாம் பிரிவிலும் சித்தியடைந்துள்ளார்கள்

பால பண்டிதர் தேர்வில் வாசுகி தங்கவடிவேல், கமலராணி திருமலைசாமிசர்மா ஆகியோர் மூன்றாம் பிரிவில் சித்தியடைந்துள்ளார்கள்.

பண்டிதர் தேர்வில் எவரும் சித்தியடையவில்லை.

### சோமசுந்தரம் அவர்கள்

# அனாதைகளை அரவணைக்கும் அரும் பண்பு உள்ளவர்

"திருவாளர் சோமசுந்தரம் பிள்ளைக்கு உலகசாதனையாளர் விருது என்றோ கிடைத்திருக்க வேண்டும். காலங்கடந்து என்றாலும் இது கிடைத்தமை பாராட்டிற்குரியது. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றும் அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை'' என்றும் வள்ளுவர் சொன்னார். திரு சோமசுந்தரம்பிள்ளை பொருள், அருள் இரண்டும் நிரம்பப்பெற்றவர், ஏழை பங்காளன். இவரது சேவையைத் தமிழ் மக்கள் மேலும் எதிர் பார்க்கிறார்கள்.''

இவ்வாறு பரத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் புலோலி ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற பட்டயக்கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம் பிள்ளையின் பாராட்டு வைபவத்திலும். தேநீர் விருந்திலும் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

இவ்விழாவிற்கு மன்றத்தலைவர் திரு. கோ. குமாரவேலு தலைமை வகித்தார். இவர் தமது உரையில் "ஞானசம்பந்தர் கலைமன்ற உறுப்பினர் ஒருவர் உலகசாதனையாளர் வரிசையில் இடம்பெற்றுள்ளமை பாராட்டிற்குரியது'' என்றார்.

வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தன் பேசுகையில், "பருத்தித்துறை அரிமாசங்கத்தின் முதல் தலைவராக இருந்த சோமசுந்தரம் பிள்ளை மனித நேயம் கொண்டவர். வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் அவரது காரைக் கண்டதும் அனாதைக்குழந்தைகள் ஓடிவந்து தமது தகப்பனாரைக் கண்ட பரிவோடு ஐயா ஐயா என்று சூழ்ந்து மகிழ்வதை நான் கண்டிருக்கிறேன். உரிமைகள் மறுக்கப்பட்ட மக்கள்மீதும், அகதிகள், அனாதைகள் மீதும் அவரது சேவை நோக்கு இருப்பது மகிழ்ச்சியானது'' என்றார்.

எழுத்தாளர் நெல்லை க. பேரன் பேசுகையில், "பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தினரை ஈழத்து எழுத்தாளர்களுடன் இணைத்துவைத்த பெருமை திரு. சோமசுந்தரம்பிள்ளைக்குரியது. வளரும் மாணவ எழுத்தாளரை ஊக்குவிப்பதற்காக இவர் கட்டைவேலி ஞானாசாரியர் மாணவ எழுத்தாளர்களுக்கு இலவசமாக மாதந்தோறும் சஞ்சிகைகளையும் வாசிப்பு நூல்களையும் வழங்கிவருகிறார் மதுவும் மாமிசமும் இல்லாத தூய வாழ்க்கை வாழும் இம்மனிதர் நீண்டகாலம் வாழ்ந்து மக்களுக்கும் கலைஞர்களுக்கும் சேவை செய்யவேண்டும்'' என்றார்.

கலைமன்ற உறுப்பினரும் மன்னார் திட்டமிடல் உத்தியோகத்தருமான திரு. இராசரத்தினம், ஹாட்லிக் கல்லூரி மாணவர் திரு. ஆ. மயூரன் ஆகியோரும் பேசினர்.

திரு அ. சோமசுந்தரம் பிள்ளை பேசுகையில், அன்பு' என்பது பற்றியும் தமது ஊற்று நிறுவனம் தொடர்பான அபிவிருத்தித்திட்டங்கள் பற்றியும் விரிவாகப் பேசினார். தேநீர் விருந்தைத் தொடர்ந்து மன்றச் செயலாளர் திருமதி இ. யோகரஞ்சிதம் நன்றி கூறினார்.

### நாவற்குழியில்

# ஆட்களில்லா வீடுகளில் கள்வரின் கைவரிசை

(குருநகர்)

குருநகர் வாசிகளுக்கு நாவற்குழியில் வழங்கப்பட்ட நவீன தளபாடங்கள் பொருந்திய வீடுகளில் நாளாந்தம் வீட்டுத் தளபாடங்கள் உட்பட நவீன அமைப்பில் பொருத்தப்பட்ட மின் குமிழ் வகைகள், மெயின் இணைப்புகள் கதவுப் பூட்டுகள், முதலான பொருட்கள் களவாடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவற்குழி இராணுவ முகாமுக்கு அண்மித்ததாக அவ்வீடுகள் அமைந்துள்ளதால் குடியிருந்த குருநகர் வாசிகள் தற்சமயம் அவ்வீடுகளைப் பூட்டி வைத்துவிட்டு குருநகரிலுள்ள உறவினர்களது வீடுகளில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது குடியிருப்பாளர்கள் இல்லாததைப் பயன்படுத்தி நளாந்தம் திருடர்கள் கைவரிசை காட்டி வருவதை உடனடியாகத் தலையிட்டு நிறுத்தக் கூடியவர்கள் இது விசயத்தில் கவனம் எடுக்க வேண்டுமென குடியிருப்பாளர்களாகிய குருநகர் வாசிகள் எதிர்பாக்கின்றனர்.

# இன்றைய நிலையில் மாணவர் அதிகம் கற்பது அவசியம்

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் கல்விப் பொருட்காட்சி அதிபர் திரு. மு. நல்லையா தலைமையில் நடைபெற்றது

சிறப்பு விருந்தினராக பங்குபற்றிய கோப்பாய் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் திரு. பூ. க. இராசரத்தினம் மங்கள விளக்கை ஏற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

பிரதம விருந்தினர் திரு. பி. எஸ். சர்மா தமதுரையில் "ஔவைப்பிராட்டியார் பால், தேன், பாகு, பருப்பு ஆகிய நான்கு பொருட்களை சேர்த்துக் கொடுத்து தமிழ் மூன்றையும் தரும்படி கேட்டார். இதே போன்று மாணவர் அதிகம் கற்க வேண்டும். அப்போதுதான் சிறிதளவு கல்வி மனதில் பதிந்து கொள்ளும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். முன்னைய அதிபர் ஆசிரியர் கற்பித்தலுக்கு மேற்கொண்ட பிரயத்தனங்கள் யாவராலும் பாராட்டப்படுவதைக் காண்கின்றோம். இந்தப் பெயரை இப்போதைய சந்ததியினரும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

திரு பூ.க. இராசரத்தினம் உரையாற்றும் போது "இப் பொருட்காட்சி ஒருதனி முயற்சியல்ல, முழு ஆசிரியர்களதும் விடாமுயற்சியே. இம்முயற்சிபாடசாலை தனது இலக்கை அடைய உறுதுணையாகும்'' எனக் கூறினர்.

# கல்விப்பணிப்பாளரின் அரிய முயற்சிக்கு பாராட்டு

மாணவர்கள் தங்கள் முயற்சிகளின் பிரதிபலிப்புக்களைத் தாங்களே பார்வையிடுவதன் மூலம் தங்கள் அனுபவங்களைத் திருத்திக் கொள்ளவும், வளர்த்துக்கொள்ளவும் வழி பிறக்கின்றது. 'அனுபவத்தின் மூலம் தான்' கல்வி என்ற உளவியல் தத்துவத்தை அடிநாதமாகக் கொண்டு இப்படியொரு கல்விக் கண்காட்சி நடைபெறக் கர்த்தாவாக இருந்த நமது கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.''

நாவாந்துறை றோமன் கலவன் வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சிக்குத் தலைமை வகித்த வித்தியாலய அதிபர் திரு. ஜி. இராசரத்தினம் அவர்கள் தமது தலைமை உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்விக் கண்காட்சியைத் திறந்துவைத்த பங்குத்தந்தை வண பி எம். இம்மானுவேல் அடிகள் தமதுரையில் "அண்மைக் காலந் தொடக்கம் இப்பகுதி மக்கள் தங்கள் கல்வி வளர்ச்சியில் காட்டிவரும் அக்கறை என்னை ஆச்சரியப்பட வைக்கிறது'' என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ சிவானந்தன் தனதுரையில் "எத்தனையோ நெருக்கடிகளை எதிர் கொண்டிருந்தும், இந்த விழாவை இவ்வளவு சிறப்பாக நிர்வகித்த அனைவரது முயற்சிகளும் பாராட்டுக்குரியது'' என்றார்.

பாடசாலையின் தேவைகள் பற்றி பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. பெ. ஜேக்கப் குறிப்பிட்டார். உதவி அதிபர் திரு. சு. மலக்கியாஸ் உரையாற்றினார். திரு. ச. மரியாம்பிள்ளை நன்றியுரை கூறினார். பெருந்திரளான மக்கள் விழாவில் கலந்துகொண்டனர்

## சைவ வட்டம்

(சரசாலை)

கரவெட்டி சட்டத்தரணி திரு. செல்லையாவின் இல்லத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் ஆத்மஜோதி நா. முத்தையா கலந்து கொண்டு சைவ வட்டத்தை ஆரம்பித்து உரை நிகழ்த்தினார். பிரார்த்தனையும் இடம்பெற்றது.

மேற்படி வைபவத்தில் இளைஞர் சேவை அலுவலர் திரு. எஸ். நாகேந்திரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பயிற்சி வகுப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு, வேலணை கல்வி வட்டாரங்களில் உள்ள பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விஷேட சேவைக் காலப்பயிற்சி வகுப்பு இம் மாதம் 9, 10, 11, 12ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை புங்குடுதீவு, வேலணை வட்டாரக் கல்வியதிகாரிகள் செய்துள்ளனர். இப் பயிற்சி வகுப்பில் பங்கு கொள்வோர் தீவுப் பகுதிகளிலிருந்து யாழ். நகருக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப் படுகிறது.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

## ஆபத்தின் மத்தியில் அரிய நிகழ்ச்சி

(கரவெட்டி)

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் கல்விக் கண்காட்சியொன்று நடைபெற்றது. இக் கண்காட்சியினைப் பாடசாலை ஸ்தாபகரது மகன் திரு. வீ. ராசசேகரன் திறந்து வைத்தார். உடுப்பிட்டி வட்டாரக்கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதமும் இக் கண்காட்சியில் கலந்து கொண்டார்.

இப்பாடசாலை தொண்டமானாறு இராணுவ முகாமிற்கு அருகில் இருந்தபோதிலும் வெகு விமரிசையாக இப்படியான ஒரு கண்காட்சியை நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு இன்று இப்பகுதி மக்கள் அரசின் அராஜக நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வெவ்வேறு இடங்களில் தஞ்சமடைந்திருந்தாலும் தமது பிள்ளைகளின் கல்வியில் கொண்டுள்ள அக்கறையினால் திரள் திரளாக வந்து கண்காட்சியைப் பார்த்துச் சென்றனர்.

## ஐயனார் உற்சவம்

(அராலி)

அராலி கிழக்கு மலைஉபாளங்காடு அருள்மிகு ஐயனார் கோவில் வருடாந்த மஹோற்சவம் ஆனி மாதம் இருபத்து மூன்றாம் திகதி ஆரம்பமாகி முப்பத்திஒராம திகதி பொங்கலுடன் நிறைவுபெறும்.

# சாதனை பல படைத்த நாடி சாஸ்திர வைத்தியர்

தீவகத்தின் மூத்த வைத்திய பரம்பரையின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து பல்லாயிரம் மக்களின் பிணி தீர்த்த முதுபெரும் வைத்தியர் திரு. வீரவாகு தம்பிராசா (தம்பையா) தமது 82-வது வயதில் (07.06.86) தனது பூதவுடல் நீத்துப் புகழுடம்பு எய்திவிட்டார்.

புங்குடுதீவில் 1904ம் ஆண்டு ஆனி மாதம் 26ம் திகதி அவதரித்த இவர், சுமார் 60 ஆண்டு காலம் இப்பகுதி மக்களின் துயர் நீக்கிய ஓர் உத்தம வைத்தியராவர். தமது ஆரம்பக் கல்வியைப் புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும். பின்பு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகியவற்றிலும் கற்ற இவர், உயர் கல்வியில் நாட்டம் கொள்ளாது தமது பரம்பரைத் தொழிலான சித்தாயுர்வேத வைத்தியத்தில் ஈடுபட்டார். இவரது தாய் மாமனார்களில் ஒருவரான சரவணையூர் வி. லட்சுமணபிள்ளை என்பவரிடம் வைத்தியக் கல்வியைக் கற்றுக்கொண்ட இவர், 1924ம் ஆண்டு முதல் தாமாகவே வைத்தியத் தொழிலில் ஈடுபட்டு தீவுப்பகுதியின் பல்வேறு பகுதி வாழ் மக்களிடத்திலும் நன்கு பிரபல்லியம் பெற்று விளங்கினார்.

நாடி சாஸ்திரத்தின் மூலம் நோயை நன்கு அறிந்து வைத்தியம் செய்வதில் இவர் பெரும் சாதனை படைத்தார். அரசினர் வைத்தியசாலைகளிலுள்ள பிரபல டாக்டர்களினாலும் கைவிடப்பட்ட கடுமையான நோயாளிகளைக் கூடத் தமது சிகிச்சை மூலம் சுகப்படுத்தியுள்ளார். குழந்தை வைத்தியத்தில் விசேட தகுதியுள்ளவரென அரசாங்கத்தால் அங்கீகாரம் பெற்றவர் இவர். முன்னைய காலங்களில் எமது கிராமப்பகுதிகளில் காணப்பெற்ற உயிராபத்தை விளைவிக்கும் நோய்களான வாந்திபேதி, வயிற்றோட்டம், மலேரியா போன்றவற்றால் பீடிக்கப்பட்டு இறக்கும் தறுவாயிலிருந்த அநேக நோயாளிகளைத் தமது சிகிச்சையினால் காப்பாற்றிய பெருமைக்குரியவர்.

நோயாளிகளைக் கைநாடி பார்த்து இன்ன காலத் தவணையில் இவர் சுகம் பெறுவார்; இன்றேல் மரணமாவார் என்பதை ஐயம் திரிபின்றி அறுதியிட்டுக் கூறிவிடுவார். தமது மரணத்தைக் கூட முன்கூட்டியே அறிந்து தமது இனிய நல் மக்களிடம் ஞாபகப்படுத்தியிருந்தார். இதன் மூலம் இவர் ஓர் சித்தர் பரம்பரையில் வந்துதித்தவர் என்பதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

தீவுப் பகுதியில் மாத்திரமன்றி வட மாகாணத்தின் பல பகுதிகளிலும் வாழும் மக்கள் இவரது வைத்திய உதவியைப் பெற்றுள்ளனர். வைத்தியத் துறையில் மாத்திரமன்றிச் சோதிடத்திலும் வல்லவராய் விளங்கிய இவர் எதைச்சொன்னாலும் அது பலிக்காது விட்டது கிடையாது. தமது 60 வருடகால வைத்தியப்பணியை கால் நடையாகவே இவர் செய்து வந்துள்ளார் என்றால் அதுவும் ஒரு சாதனையே. விடா முயற்சியும், சளைக்காத மனமும், இனிய நற் குழந்தை வாய் மழலைச் சொற்களும் பேசுமிவரைத் தமது குடும்ப நண்பராகவே இப்பகுதி மக்கள் மதித்துப் பழகினர்.

1939ம் ஆண்டளவில் மலாயா நாட்டிற்குச் சென்று சிறிது காலம் தொழில் புரிந்து தீவகத்திற்குப் பெருமையைச் சேர்த்துப் பின் தமது பிறந்த மண்ணிற்கு வந்து வைத்தியப் பணியைத் தொடர்ந்தார். வஞ்சனையாளர்களைக் கண்டால் நெஞ்சு பொறுக்குதில்லையே என்று கூறுவார். மிகவும் ஆக்ரோஷமானவர். அன்பானவர்களைக் கண்டால் தன்னையே மறந்து விடுவார். இனிய நல்மக்களைப் பெற்று நல்லறிவூட்டி, வாழும் வகை இவையெனெ வாழ்ந்து காட்டி, கற்றோர் அவையிலும் தம் மக்களை முதன்மை பெற்றிருக்கச் செய்த பெருமைக்குரியவர் ஓய்வு ஒழிச்சலின்றி நாள் முழுதும், நோயாளிகளுடனும், ஊர்மக்களுடனும் ஊடாடித் திரிந்த அந்த மெலிந்த தோற்றமுடைய உருவம் இன்று எம் மத்தியிலிருந்து மறைந்து 31 தினங்களாகி விட்டன. 31 யுகங்கள் சென்றாலும் அவர் எம் மக்களோடு பழகிய நினைவுகளும், சித்தாயுர்வேதத் தொண்டுகளும் எமது தீவகத்தில் என்றும் மறையாது நிலைகொண்டு நிற்கும் என்பது திண்ணம்.



பிரபல எழுத்தாளரும், கல்லூரி அதிபருமான திரு. த. நாவேந்தன், புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய அதிபர் திரு. த. துரைசிங்கம், திருமதி பராசக்தி இராமலிங்கம், திருமதி ஞானசக்தி முருகேசு (பெரும்பாக உத்தியோகத்தர், சுமநலசேவை நிலையம்-கைதடி) ஆயுர்வேத வைத்தியர் திரு. த. சிவானந்தன், மூலிகை வைத்திய நிபுணர் திரு. த. இளங்கோவன், செல்வி த. சரோஜினிதேவி (ஓய்வூதியக் கிளை- யாழ்- கச்சேரி), திரு த. தமிழ் மாறன் (சட்டத்துறை விரிவுரையாளர்- கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோர் அன்னாரது பிள்ளைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சோ. சச்சிதானந்தன்
(விசேட சேவை அலுவலர் புங்குடுதீவு)

## புனருத்தாரண பணிகள்

(சுழிபுரம்)

தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மேலும் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ள இவ்வேலைகள் இன்னும் சில தினங்களுள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன.

இத் திருத்த வேலைகளுக்காக மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இம் மாதம் வரை பிற்போடப்பட்டிருந்தது. இதன்படி எதிர்வரும் 11ம் திகதி வெள்ளிக்கிழமை துவஜாரோகணத்துடன் உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்தாம் நாள் 20ம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ஜனாதிபதி போத்தாவுக்கு பெரும் தலையிடி
இலங்கையில் இடம் பெறுவதுபோல அடுத்தடுத்து

# தென்னாபிரிக்காவில் குண்டு வெடிப்புகள் அதிகரிப்பு

(ஜோகனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களாக குண்டுகள் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கேப்டவுன், ஜோகனஸ்பேர்க், டர்பன் ஆகிய நகரங்களிலேயே இவ்வாறு குண்டுகள் வெடித்துள்ளன.

இதுவரை பன்னிரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றதால் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களின் விபரம் சரியாக தெரியவில்லை. தென்னாபிரிக்காவுடனான செய்தித் தொடர்புகள், துண்டிக்கப்பட்டுள்ளதால் விபரங்கள் அறிய முடியவில்லை.

இச்சம்பவங்களும், வெளிநாடுகளின் பொருளாதாரத் தடைகள் விதிப்பு நடவடிக்கைகளும் ஜனாதிபதி போத்தாவுக்கு பெரும் தலையிடியை கொடுத்துள்ளன.

குண்டு வெடிப்புகள் திடீரென எங்கே, எப்போது என்று சொல்லமுடியாதவாறு இடம் பெறுவதால் எங்கும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வெள்ளையர்களுக்கு இது ஒரு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

# அமெரிக்க உளவாளி என எகிப்து மீது லிபியா சீற்றம்

(கெய்ரோ)

லிபியா மீது அமெரிக்கா கடந்த ஏப்ரல் மாதம் நடாத்திய விமானத் தாக்குதலுக்கு எகிப்து உளவாளியாக இருந்தது என லிபியா தெரிவித்த குற்றச்சாட்டை எகிப்திய ஜனாதிபதி முபாரக் மறுத்துள்ளார்.

"அல்அக்ராம்' என்ற பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

லிபியாவில் தொழில் புரியும் சில எகிப்தியர்கள் இவ்வாறு அமெரிக்காவுக்கு உளவு வேலைகளில் ஈடுபட்டு உதவியதாக அண்மையில் லிபியா குற்றம் சாட்டியது. இதனை மறுத்த ஜனாதிபதி அரபுநாடுகளிடையே ஒற்றுமையும், நல்லெண்ணமும் ஏற்படவேண்டும் எனவும் சொன்னார்.

ஆச்சரியம் ஆனால் உண்மை

## ஆண் கடற்குதிரை 1800 குட்டிகள் ஈன்றது

(சென்னை)

கடற்குதிரை ஒன்று கடலில் பிடிக்கப்பட்டு சென்னை மெரினாக் கடற்கரையின் மீன்காட்சிக் கூடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மீனவரின் வலையில் இது அகப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆண் கடற்குதிரையான இது அத்திலாந்திக் சமுத்திரத்திலேயே வாழுகிறதாம். இந்த ஆண் கடற்குதிரை நேற்று முன்தினம் 1800 குட்டிகளை ஈன்றது.

இந்த குதிரை இனத்தில் ஆண்களே குட்டிகளை ஈன்று வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இவற்றின் அடி வயிற்றில் உள்ள பை ஒன்றில் குட்டிகள் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் பலர் இதனை பார்வையிட்டனர்.

1983ம் வருடத்திலும் இவ்வாறு ஒரு குதிரை இங்கு பிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழர்...

பெறாத பின்வருவன, பின்னே நேரவுள்ள பொல்லாங்குகளுக்கு முன்னே வரும் மணியோசை என, எவர் காதிலும் ஒலிக்கும் என்பது திண்ணம் அன்றோ?

இப்பிரேரணைகளுள் கல்வி எங்கே? அதனைக் காணோம். பல்கலைக்கழகப் பரீட்சைகள் பற்றியும் தரப்படுத்தல் பற்றியும் கக்கப்பட்ட விஷமும் வெஞ்சினமும் எங்கோ சென்று ஒய்ந்திருக்கும் இக்கட்டத்தில், மிக மர்ம கச்சிதமாக (விளங்கிக் கொள்ள ஒண்ணாவெகு சுருக்கமாக), 'இது தேசிய கல்விக் கொள்கை "பாரபட்சமற்றதாக" இருக்கும் என இப்பொழுது கூறப்பட்டிருக்கிறது. அதனையும் விட, வரும் தீங்கு தொனிக்க, 'எல்லா உயர் தொழிற் கல்வியும்' கூட ஏலவே ஒதுக்கப்பட்ட விடயங்களினது நிரலின்கீழ் வரும், எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் பார்க்கப்போனால், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் அனுசரிக்கப்படவுள்ள தேசிய மனித இன விகிதாசாரம் தொடர்பான மேலெழுந்தவாரியான 'வள வளா' வார்த்தைகள், மனக் கலவரமூட்டுகின்றன. மகாவலித் திட்டம் பாரிய ஒன்று என நாமறிவோம். அது திண்ணம். ஆனால், மாகாணங்கள் இரண்டை உள்ளடக்காத உருப்படியான நீர்ப்பாசனத் திட்டம் எதுவும் இருக்கக் கூடுமா?

இவை தவிர இன்னமும் அதிக மன சஞ்சலந் தரும் பிரச்சினையொன்றும் இப்பிரேரணைகளில் இடம்பெறுகிறது: உருவமைப்பில் ஒரே ஆட்களாக உள்ள 'மலையகத் தமிழரைக்' கூறு போட்டு மூன்று மாகாண சபைகளில் அவர்களுக்கு இடம் வழங்கப்பட்டு இருக்கிறது.

இலங்கை அரசாங்கம் ஒரு மெய்ம்மையை அறியாமலா இருக்கிறது? தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி வாயிலாக ஒருவர் எதற்கும் அங்கீகாரம் ஈட்டிக்கொள்ளலாம். அதனைப் பொருட்படுத்தவேண்டியதில்லை. தமிழர் விடுதலைப் போராளிகளின் உடன்பாடு இல்லாமல் இப் பிரேரணைகளின் அமுலாக்கம் எதுவும் சாத்தியமாகாது என்பதே அம் மெய்ம்மை.

இக் கட்டத்தில்தான், உள்ளபடியாகத் தமிழர் விடுதலைப் போராளிகள் முகம்கொடுத்து நிற்கும் ஒரு கடின நிலை பற்றி நாம் அறிந்திருக்க வேண்டியதாகிறது. பாராளுமன்றத்தவர்கள் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர். அவர்கள் செல்ல வல்ல தாழ்நிலைக்கு இப்போராளிகள் இறங்குவர் என நாம் நிச்சயம் எதிர்பார்க்க இயலாது அல்லவா? எந்தவொரு விடுதலை இயக்கமும் ஒரு குறிநிலைக்கு இறங்கி அதற்கு அப்பால் செல்ல முடியாது இருக்கும். அக் குறிநிலையைக் கனம்பண்ணி அதற்கு மரியாதை செலுத்துதல் வேண்டும். தமிழர் விடுதலைப் போராளியின் காட்சித் தோற்றத்தை 'குழப்பியடிக்க' தமிழ் மக்களே விரும்பமாட்டார்கள்.

இவை ஒருபுறம் இருக்க, இந்த தமிழர் விடுதலைப் போராளிகளின் போராட்டத்தில் ஏற்கெனவே இறுக்கப்பட்டுள்ள கனத்த பெரும் இழப்புகளையும் நாம் மனதில் இருத்திக்கொள்ளல் வேண்டும்.

ஆக, இம்மாபெரும் விடயம் முழுவதும் அச்சாணி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காரணியாகச் செறிந்து சுருக்கமடைந்து விளங்குகிறது. நம்பகத் தன்மைதான் அக் காரணி. புறத்தேயிருந்து, ஐயம் திரிபு அற, அது உறுதியளிக்கப்பட வேண்டி இருந்தமை துரதிர்ஷ்டவசமானது; ஆனால் அது இன்றியமையாதது ஆயிற்று.

## 5000 பேர் ஆர்ப்பாட்டம்

(மணிலா)

இங்குள்ள அமெரிக்க தூதரகம் முன்பு சுமார் ஐயாயிரம் பிலிப்பைன்ஸ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அமெரிக்கா பிலிப்பைன்ஸ் உள்விவகாரங்களில் தலையிடுவதாகவும் அவற்றை நிறுத்துமாறும் இவர்கள் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈழமுரசு
THE EELAMURASU

## வானொலி தமிழ் ஊழியர்களை மீண்டும் வேலைக்கு வருமாறு அழைப்பு

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் ஊழியர்கள் அனைவரையும் உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளதாக கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து இவர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தனர். இது தொடர்பாக நிர்வாகம் தனது அறிக்கையில்; கொழும்பில் குண்டுகள் வெடித்த துரதிஷ்ட வசமான காலகட்டங்களில் தமிழ் ஊழியர்கள் தொடர்ந்து கடமையாற்றுதலினால் அவர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் ஏற்படக் கூடிய அபாயங்களை - அவர்களின் சொந்தநலன்கருதி - அவற்றினின்றும் தடுப்பதன் பொருட்டாகவே இவர்கள் விசேட விடுமுறையில் அனுப்பிவைக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

நிவாரணம் வழங்குவதற்கு

# கிளிநொச்சி அகதிகளை முகாம் அழைக்கின்றது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அசம்பாவிதங்களால் தமது வீடுகளை விட்டு வெளியேறியோருக்கு வழங்கப்படவிருக்கும் நிவாரணப் பொருட்கள் இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படவிருப்பதை ஆட்சேபித்து கிளிநொச்சி அத்தியாவசிய சேவைக்குழு கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை கையளித்துள்ளது. இம் மகஜரில் சுமார் எண்பத்தைந்து பொதுஸ்தாபனங்கள் கையொப்பமிட்டுள்ளன.

கிளிநொச்சி நகருக்கு அண்மையிலுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்டு தூரத்திலுள்ள கிராமங்களில் அகதி முகாம்களிலும், தமது உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் தமது பழைய இடங்களில் திரும்பக் குடியேறினால் மட்டுமே இருவார பங்கீட்டு உணவுப் பொருட்கள் கொடுக்கப்படும் என்று முன்னர் அரசாங்கத்தால் கூறப்பட்டது.

கிளிநொச்சி அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு. என். ஜெயநாதன் அவர்களின் முயற்சியினால் இம்முறை மாற்றியமைக்கப்பட்டது. இதற்காக இம்மகஜரில் நன்றி தெரிவிக்கப்பட்டுளளது.

நிவாரணப் பொருட்கள் கிளிநொச்சி இராணுவ முகாமில் வைத்து வழங்கபபடுவதை மக்கள் விரும்பவில்லை. மிகுந்த அச்சம் தெரிவித்துள்ளனர்.

முகாமுக்குச் சென்று அகதிகள் பத்திரமாக திரும்புவற்கு தாங்கள் உத்தரவாதம் கூறலாம். ஆனால், இராணுவத்தினர் அடிக்கடி கூறுவது போல் சித்தசுவாதீனமாக அல்லது இன உணர்ச்சி காரணமாக அங்கு செல்லும் மக்களை சுட்டுக்கொன்றால் எவராலும் அவ்வுயிர்களை மீட்டுத்தர முடியாது. கடந்த கால வரலாற்றைப் புரட்டினால் உண்மை விளங்கும். விசாரணைக்காக கூட்டிச்செல்வதாக கூறி வீதிகளில்வைத்து சுட்டுக் கொன்றமை, சில மாதங்களுக்கு முன்பு கிளிநொச்சி புகையிர நிலையத்தில் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டமை, யாழ்நகரில் ஓய்வூதியம் பெறச்சென்ற வயோதிபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை ஆகியவற்றை எளிதில் மறைக்கவோ மறக்கவோ முடியாது.

எனவே தாங்கள் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இத்தீர்மானத்தை மாற்றியமைக்குமாறும், வழமைபோல் கிராமசேவகர்கள் ஊடாக அவ்வப்பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கைகூப்பி வேண்டிக் கொள்கிறோம்'' என்று இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில் ராணுவத்தின் சோதனை அதிகரிக்கிறது!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுபகுதியில் கடந்த சில நாட்களாக ராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகளும், வீதித் தடை சோதனைகளும் அதிகரித்துள்ளன.

கிளிநொச்சியூடாகசெல்லாது வட பகுதி வாகனங்கள் இப்பகுதியால் கொழும்புக்கு செல்வதால் வீதித்தடை சோதனை அதிகரித்துள்ளதாக தெரிகிறது.

முக்கியமான சந்திகளில் வைத்துவாகனங்களில்வரும்உணவு பொருட்கள் மற்றும் பொருட்கள் கீழே இறக்கப்பட்டு சோதனையிடப்படுவதால் வியாபாரிகளும் பொதுமக்களும் பலத்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.

### இலங்கை...

'ஆஞ்சனேயர்' என்னும் படகில் புறப்பட்டோம். படகு இராமேஸ்வரம் கரையிலிருந்து மூன்று மைல்கள் சென்றிருக்கும். அப்போது இலங்கை கடற்படைப் படகு ஒன்று எங்கள் படகை துரத்திவந்து பிடித்தது. அதில் வந்த கடற்படையினர் எங்களைப் பலமாகத் தாக்கினர். அதன் பின்னர் அவர்கள் எங்களைப் போக விட்டனர் நாம் படகில் தொடர்ந்து சென்றபோது வேறு ஒரு இலங்கை கடற்படைப்படகு எங்களை சுற்றி வளைத்தது, பின்னர் அவர்கள் எங்களிடமிருந்த மீன், இறால், மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் பறித்தெடுத்தனர். அதன்பின்னர் அவர்கள் போய் விட்டனர். அவர்கள் போய் சிறிது நேரத்தில் மற்றுமொரு கடற்படைப் படகு எங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. நாம் அந்த சூடுகளுக்கு படகின் அடித்தட்டில் படுத்து ஒருவாறு தப்பினோம். எனினும் ஒரு சூடு எம் படகிலிருந்த பெரியவர் மீது பட்டது. அவர் அதனால் காயமடைந்தார்.

அதன் பின்னர் நாம் தொடர்ந்தும் மீன் பிடிக்கமுடியாமல் இராமேஸ்வரத்தை நோக்கி திரும்பும்போது பெரியதொரு கடற்படைக் கப்பலிடம் அகப்பட்டுக் கொண்டோம். அவர்கள் எங்கள் படகின் இயந்திரத்தை அடித்து நொருக்கி இயங்காதவாறு செய்தனர். அதன்பின்னர் எம்மை பலமாகத் தாக்கி துன்புறுத்தினர். நாம் இந்திய மீனவர்கள் எனக்கூறியபோது மேலும் பலமாகத் தாக்கப்பட்டோம்.

பின்னர் எங்கள் படகை தங்கள் கப்பலுடன் கயிற்றினால் இணைத்து வைத்துக் கொண்டனர். பல மணி நேரமாக படகுடன் இருந்த நாம் தாகம் தாங்கமுடியாத நிலையில் அவர்களிடம் தண்ணீர் தரும்படி கெஞ்சிக்கேட்டோம். பலதடவைகள் நாம் தண்ணீர் கேட்டதும் எங்கள் படகை அவிழ்த்து ஓடித்தப்புமாறு விரட்டினர். நாம் தாகம், பசி, வலியுடன் படகை வலித்து அவர்கள் பார்வையில் இருந்து விடுபட்டு நேற்று முன்தினமிரவு புங்குடுதீவு கரையை வந்தடைந்தோம்'' என நாகமுத்து தெரிவித்தார்.

### அனுமதி...

வழங்கப்பட்டது. சம்பவ தினம் மாலை 4 30 மணிபோல் எமது படகுகளை சுற்றிவளைத்த கடற்படையினரிடம் நாம் கைகளை மேலே உயர்த்திய வண்ணம் அனுமதி பெற்ற விபரத்தினைத் தெரிவித்தோம். ஆனால் அவர்கள் அதற்கு செவி மடுக்காது எம்மேல் துப்பாக்கிபபிரயோகம் மேற்கொண்டு எனது சக தொழிலாளர்கள் ஒன்பது பேரை சுட்டுக் கொன்றனர் என கணபதி மேலும் தெரிவித்தார்.

கணபதி பயணம் செய்த படகின் என்ஜின் அறையில் மட்டும் ஆயிரம் வரையிலான துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் காணப்பட்டன.

### யாழ்....

வழியில் சோதனையிடுவோருக்கு காண்பித்தால் அந்த இடங்களில் இவ்வாறான இறக்கிச் சோதனைகள் நடைபெறாது.

இதற்கு வசதியாக லொறிகள் காலை ஆறு மணிக்கும் மாலை ஆறு மணிக்கும் இடையில் பொலிஸ் நிலையம் முன்பாக தோற்றவேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது. இரவு நேரத்தில் அவ்வேலைகள் நடைபெறமாட்டாது.

இறக்கி ஏற்றும் வேலைகளை வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டினால் காயமுற்ற பெரியவர் தற்போது புங்குடுதீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். ஏனைய மீனவர்கள் மிகவும் களைப்படைந்த நிலையில் புங்குடுதீவில் தங்கியுள்ளனர்.

'ஆஞ்சனேயர்' படகைத் தேடிவந்த 'ஸ்ரீ இராம ஜெயம்' நிறுவன இரு படகுகள் கடற்படையினரின் சூட்டுக்கு இலக்காகிய சமயம் அதில் இருந்த ஒன்பது இராமேஸ்வரம் மீனவர்கள் உயிரிழந்ததும், அதில் உயிர்தப்பிய வி. கணபதி என்பவர் யாழ். வைத்திதிசாலையில் சிகிச்சை பெற்று வருவதும் வாசகர்கள் அறிந்ததே.

## சின்னக்கடை கொள்ளைப் பணம் மீட்கப்பட்டுள்ளது

(குருநகர்)

கடந்த வியாழன் இரவு சின்னக்கடை பாங்ஷால் வீதியிலுள்ள மூன்று கடைகளில் கொள்ளைபோன ரொக்கப் பணம் சுமார் இருபத்தையாயிரம் ரூபாவும் மீட்கப்பட்டுள்ளதாக குருநகர் புதிய வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

வர்த்தகர் சங்கம், சந்தேக நபரை இளைஞர் அமைப்பொன்றிடம் கையளித்ததன் பயனாகக் கொள்ளைபோன பணம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சத்தியா ஸ்ரோர்ஸ் அன் பேக்கரி, சிவன் ஸ்ரோர்ஸ், நியூ றஞ்சனா ஸ்ரோர்ஸ் ஆகியவைகளில் வியாழனன்று கொள்ளையிடப்பட்டிருந்தது.

கொள்ளையர் சத்தியா பேக்கரி ஊழியரான மன்னாரைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. கொள்ளையிடப்பட்ட சைக்கிள் உதிரிப்பாகங்கள் கடலில் அவரால் வீசப்பட்டுள்ளதாகவும் கண்டெடுப்பவர்கள் குருநகர் புதிய வர்த்தகர் சங்கத்தில் ஒப்படைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

### மரத்துடன் ஒரு சடலம்

(திருகோணமலை)

இங்குள்ள நிலாவெளி பத்தாம் கட்டை சந்தியிலுள்ள ஆலமரத்தில் நேற்று முன்தினம் இரவு ஆறுமுகம் யோகராசா என்பவரது சடலம் கட்டப்பட்டிருந்தது.

இச்சடலத்துக்கு அருகில் இவர் ஒரு சமூகவிரோதி எனவும் மக்கள் விடுதலைப்படை இவருக்கு மரணதண்டனை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### இருவருக்கு..

யம், மருதயினார்பிள்ளை ஆகிய இருவரும் போராளிகளின் முகாம்களை இராணுவத்தினருக்குக் காட்டிக்கொடுக்கும் செயலில் ஈடுபட்டு வந்ததால் இவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## கிராம சேவகர்கள் வருடாந்தக் கூட்டம்

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் 23 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் திரு. வை. மு பஞ்சலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. இராமநாதன், தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம். பொதுசன தொடர்பதிகாரி திரு த. குலசேகரம் ஆகியோர் கலந்து கொள்வர்.

## இன்று

(காரைநகர்)

காரைநகர் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் திரு. ந தர்மராசா தலைமையில் நடைபெறும்.

## நள்ளிரவில் ஷெல் அடி

(வல்வெட்டித்துறை)

நேற்று முன்தினமிரவு பன்னிரண்டு மணிபோல் வல்வை இராணுவ முகாமிலிருந்து அடிக்கப்பட்ட ஷெல் சத்தங்களினால் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

நடு ஜாமத்தில் கேட்ட பல ஷெல்கள் கரையோரப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. ஷெல் ஒன்று தாக்கியதில் கொத்தியால் கடற்கரையோரத்திலுள்ள வீடொன்று பலத்த சேதமடைந்துள்ளது.

கரையோரமக்கள் பலர் வீடுகளில் இரவில் தங்குவதில்லையாதலால் உயிராபத்து எதுவும் நிகழவில்லை.

## 11 பேர் மட்டும் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலையில் கைது செய்யப்பட்டு கோட்டை முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்களில் பதினொரு பேர் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

## எட்டு இளைஞர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு வாவியில் நேற்று முன்தினம் மூன்று படகுகளில் வந்துகொண்டிருந்த எட்டுத் தமிழ் இளைஞர்கள் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனராம்.

திருகோணமலைப் பகுதியில் இருந்து மட்டக்களப்புக்கு இவர்கள் வந்துகொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 06-07-86 ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437